சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | குருநாதன் |
| தந்தை பெயர் | : | தியாகராஜன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வட்டாட்சியர் |
| வயது | : | 55 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட

வழங்கள் அலுவலகத்தில் நான் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 05.07.2022 முதல் 02.06.2023 வரை குடவாசல் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். அவ்வாறு பணிபுரிந்த காலத்தில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் புதுக்குடி கிராமத்தை சேர்ந்த முருகானந்தம் மகன் அ.சா-1 ஆனந்த் மற்றும் ஜெயபால் மகன் அ.சா-2 தங்கமணி ஆகிய இருவரும் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவர்கள் என சாதி சான்றிதழ்கள் கடந்த 11.10.2022 ஆம் தேதி வழங்கினேன். அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர்களுக்கு உரிய சாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ- 7 மற்றும் 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.10.29 15:22:30 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.